# விளம்பரம்

VLAMBARAM™

☎: 416-282-8059 மாதமிருமுறை வெளிவரும் சமூக முன்னேற்றப் பத்திரிகை இலவசம் FREE

நதி 09 - பாலம் 19 OCTOBER 01, 1999



**வீடு விற்பது, வாங்குவது**

வாழ்வில் முக்கியமான செயல்களில் ஒன்று.
எனவே இவை பற்றி பூரணமான இலவச
ஆலோசனைகளைப் பெற அழையுங்கள்:

☎: 416-287-2183/491-4002

ராஜா எம். மகேந்திரன் sales rep.

RE/MAX Crossroads Rlty Inc.

* இன்றைய சேவை- நாளைய வெற்றி



❊ மன இறுக்கத்தை எப்படி குறைக்கலாம்? (பக். 4)

❊ பூமி எப்படித் தோன்றியிருக்கலாம்? (பக். 9)

❊ #1 ரென்னிஸ் வீராங்கனை யார்? (பக். 6)

❊ உடலில் வியர்க்காத பகுதி....? (பக்.9)



இழந்த முடியை மீண்டும் பெற வாருங்கள்

**சபோனாவிற்கு!**

***Sabona & Gift***

☎: (416) 264-8787 ☎: (416) 269-8151

Markham / Eglinton

(கலைமகள் புத்தக நிலையத்திற்கு உள்ளே)



❊ வீடுவாங்குபவர்கள், ஒன்றிற்கு மேற்பட்ட வீட்டு முகவர்களைப் பாவிக்கலாமா? (பக். 13)

❊ ஆணின் வளர்ச்சிக்கு பெண்ணா? அல்லது ஆணா? (பக்.7)

❊ வாகனம் வாங்கும் இடத்தில் திருத்த வேலைகள் செய்யலாமா? (பக்.3)

❊ சூறாவளியை எத்தனை வகையாக பிரிக்கலாம்? (பக்கம் 2)


## அருள் விருந்து

*-செ. சிவசுப்பிரமணியம்*

☞ மனுஷத்தன்மை என்னிடத்து இல்லா விட்டால் அரசனுடைய ஆபரணம் எனது கீழ்மையை மறைக்காது. மனுசத் தன்மை என்னிடத்து இருக்குமாயின் நான கட்டி இருக்கும் கந்தை என்னைக் கீழ்மைப் படுத்தாது.

☞ அஞ்சாதவனும் ஆசைப்படாதவனுமே உண்மையான மனிதன்.

☞ மிகைபட்ட செல்வத்தில் அழுந்திக் கிடப்பவன் கூண்டுக்குள் அடைபட்ட பறவை போன்றவன் அவனுடைய வாழ்வு விரிவடைவதில்லை.

☞ மேகம் நீங்கிய பின் திங்கள் உலகுக்கு வெளிச்சம் தருவது போன்று மனத் தகத்து மாசு நீங்கப் பெற்றவன் உலகுக்கு இன்னமுது ஆகின்றான்.

## உலகக் கோலங்கள்

- சிவ பஞ்சலிங்கம்

**நிக்கராகுவா (Nicaragua)**

மத்திய அமெரிக்காவில் உள்ள ஒரு நாடாகும். வடக்கே "கொண்டூரஸ்" (Honduras) தெற்கே "கோஸ்ராறிக்கா" (Costarica) கிழக்கு, மேற்கு எல்லையாக முறையே கரீபியன் கடலும், பசுபிக் சமுத்திரமும் உள்ளது.

**இதன் பரப்பளவு:** 49,998 ச..மை

**மக்கள் குடித்தொகை:** 4,096,000 பேர் (1992 ல் மதிப்பிடப்பட்டது)

**தலைநகரம்:** மனாகுவா (நாட்டின் மத்தியில ஒரு கடல் நீரேரிற்கு அருகில் உள்ளது)

**சமயம்:** ரோமன் கத்தோலிக்கர் - 95% கிறிஸ்தவர் - 5%,

**மொழி:** ஸ்பானிஷ், ஆங்கிலம்

**சுதந்திரம் :** செப்ரெம்பர் 15/1821ம் ஆண்டு ஸ்பெயின் நாட்டிடன் ஆதிக்கத்தில் இருந்து சுதந்திரம் பெற்றது.

நிறைவேற்கு துறையாக ஜனாதிபதியும், உபஜனாதிபதியும் சட்டமியற்றும் துறையாக பாராளுமன்றமும் செயல்படும் இந் நாட்டில் ஒன்பது நிர்வாக துறைகளாக பிரிக்கப்பட்டு மொத்தமாக பதினேழு


(தொடர்ச்சி 10ம் பக்கம்)


## உன்னை அறிந்தால்

அமைதி அமைதி ... நிம்மதி இதனைத்தான் மக்கள் தேடுகிறார்கள். எத்தனை கோடி பணமிருந்தாலும் மனதில் அமைதி, நிம்மதி, மகிழ்ச்சி, சந்தோஷம் இல்லாவிட்டால், பணத்திற்கு மதிப்பே இல்லாமல் போகின்றது., பணம் இல்லாமல் கவலைகள் வருவது இயல்பு. பணத்திற்காக தலைகீழாக அலைந்து, நிம்மதி இழந்து பணம் சேர்ப்பதும் ஒருவகை அமைதியின்மையே. இருக்கும் பணத்தை கொண்டு நிம்மதியாக, மன அமைதியாக இருக்க எம்மைத் தயார்ப்படுத்திக் கொள்வதே அமைதிக்கும், சாந்திக்கும் உரிய புதிய பாதையாகும்.

சிந்திக்கவும்... செயல்படவும் — நெற்றிக்கண்ணன்


விளம்பர வினாடி வினா! CTBC RADIO ✡ SUNDAYS ✡ 7:30 PM

SINGAPORE CELLULAR



Bell Mobility

CANTEL

FREE PAGER $100. Only

Call for Details

For more Information: சத்தி (416) 745-2378

Hotline: (416) 980-1234

**துரித பணமாற்றுச் சேவை**

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221

**சிவாகம கிரியா பீடம்**



☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள்.

சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்)

திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்

5 Greenleaf Terr. , Scarborough, Ont.



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
SCARBOROUGH, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978



# அறிவும் ஆக்கமும் (42)


- விஜே குலத்துங்கம்


காற்று இல்லாமல் உயிரினம் வாழ முடியாது. காற்று மெதுவாக வீசும்போது, தென்றல் என அழகாக வர்ணிக்கப்பட்டு, கவிதையும் புனையப்படும். ஆனால் இதே காற்று பலமாக வீசும்பொழுது, பாரதூரமான சேதங்களை விளைவிக்கின்றது.

அண்மையில் செய்திகளில் அதிகமாக அடிபட்ட Hurricane Floyd இந்த பலமான காற்றுக்கு ஒரு உதாரணமாகும். இப்படியான Hurricane எனப்படும் சூறாவளிக் காற்று, மெக்சிக்கோ, வளைகுடா, கரிபியன் தீவுகள், மேற்கிந்திய தீவுகள் ஆகிய பூமத்திய ரேகைக்கு அண்மித்த இடங்களில் உருவாகின்றன. இந்தப் பகுதிகளில்தான் இச் சுழல்காற்று Hurricane என அழைக்கப்படும். கொலனித்துவ ஆட்சிபுரிந்த Spanish இனத்தவரும், கரிபியன் தீவுகளில் வாழ்ந்த செவ்விந்தியரும் பெரும் காற்று, தீய சக்திகள் ஆகியவற்றை குறிப்பிடும் சொற்களில் இருந்துதான் Hurricane என்ற பெயர் உருவாகியது. இதேபோன்ற கடும் காற்று பசுபிக் சமுத்திரத்தின் மேற்குப்புறத்தில் அதாவது ஜப்பான், பிலிப்பைன்ஸ் போன்ற இடங்களில் Typhoon என அழைக்கப்படும். இந்து சமுத்திரத்தின் தென்பகுதிகளில் Cyclone என அழைக்கப்படும்.

பூமத்திய ரேகைக்கு சிறிதளவு மேலாக உள்ள Atlantic சமுத்திரத்தில்தான் Huricane உருவாகின்றன. பூமத்திய ரேகைக்கு மேலே அதற்கு சமீபமாக காற்று பலமாக வீசாத அமைதியான கடல்பகுதி காணப்படும். நீர் சூடாக இருக்கும்போது, இந்த அமைதியான கடல்பரப்புக்கு மேலே, ஈரப்பதன் நிறைந்த சூடான காற்று மேலே கிளம்பும் போது, கீழே ஒரு குறைந்த அமுக்க Low Pressure இடம் உருவாகின்றது. கீழே அமுக்கம் குறைந்ததாகவும் வெப்பநிலை கூடவாகவும் இருக்கும். மேலே கூடிய அமுக்கமும் வெப்பநிலை குறைவாக இருக்கு. மேற்புறத்திலும் கீழேயும் அமுக்க வித்தியாசம் இருப்பதால் காற்றில் சுழற்சி ஏற்படுகின்றது. இதனுடன் ஈரப்பதனுள்ள காற்று மேலே சென்று குளிர்ந்து, மழையாக கீழே வீழும் பொழுது, சக்தி வெளிப்பட்டு காற்றின் வேகம் அதிகரிக்கின்றது. இப்படி காற்றின் சக்தி அதிகரித்து, சுழன்று சுழன்று வடபுறமாக நகரும். Hurricane ஒரு வளைந்த திசையில்தான் செல்லும். பூ மத்திய ரேகைக்கு அண்மையில் ஆரம்பித்து முதலில் வடமேற்புறமாக சென்று, பின்னர் வடகிழக்கு பக்கமாக வளைந்து செல்லும் அண்மையில் ஏற்பட்ட Hurricane Floyd ஆனது முதலில் Bahamas ல் பெரும் சேதத்தை விளைவித்தது. பின்னர் வடமேற்குப்புறமாக Florida வின் மத்திய, மற்றும் வடக்குப் புறமாக சென்று மணித்தியாலத்திற்கு 121 கிலோ மீற்றர் வேகத்தில் Carolina ல் பெரு வெள்ளத்தையும் உண்டாக்கியது. பின்பு வடகிழக்குப்புறமாக மீண்டும் Atlantic சமுத்திரத்தின் பக்கம் சென்று கனடாவின் Nova Scotia பக்கமாகச் சென்றது.

கடலில் வேகம் அதிகரித்தாலும், நிலப்பரப்புக்கு மேலாகச் செல்லும்போது வேகம் குறையும். மேலும் இது ஒரு வளைந்த திசையில் வடகிழக்கு பக்கமாகச் செல்வதால், Ontario தாக்கப்படும் சந்தர்ப்பம் குறைவு. Huricane ன் பருமனைப் பொறுத்து அதை Category 1, 2. 3.... என ஐந்து வகையாகப் பிரிப்பார்கள். Category 1ன் வேகம் மணித்தியாலத்திற்கு 74-95 மைல்களாக இருக்கும். இரண்டு 96 -110 மைல்களாகவும், மூன்று 111 - 130 ஆகவும், நான்கு 131 -155 ஆகவும் ஐந்து 156க்கு மேலாகவும் இருக்கும்.





Category 5ன் போது, வீட்டின் கூரை முற்றாக சுழட்டி வீசப்பட்டு, கண்ணாடிகள் நொறுங்கியும் மரங்கள் வேரோடு பிடுங்கப்பட்டும் இருக்கும். இந்த 20ம் நூற்றாண்டில் Atlantic பகுதிகளிலும், கரிபியன் தீவுகளிலும் உண்டாகிய Hurricane களில் அதிக அழிவை உண்டாக்கியன. 1988 ஆண்டு உருவாகிய Gilbert என அழைக்கப்பட்ட Hurricane ஆனது ஜமேக்கா மற்றும் மெக்சிக்கோ பகுதிகளில் மணிக்கு 218 மைல்கள் அல்லது 350 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசி பெரும் அழிவை உண்டாக்கியது. அமெரிக்காவில் ஏற்பட்டவையுள் 1972 ம் ஆண்டு Agnes 3 பில்லியன் டொலர் சேதத்தையும், 134 உயிரிழப்பையும் 1989 ல் Hugo 4 பில்லியன் டொலர் சேதத்தையும் 50 க்கு மேற்பட்ட உயிரிழப்பையும் உண்டாக்கியது. 1992 ல் Andrew 12 பில்லியன் சேதத்தையும் 50க்கு மேற்பட்ட உயிரிழப்பையும் உண்டாக்கியது. ஒன்ராரியோவில் Hurricane Hazel எனப்படும் காற்று 1954ம் ஆண்டு October மாதம் ஏற்பட்டது. இதில் 81 பேர் இறந்தும், 100 மில்லியன் டொலர் சேதமும் ஏற்பட்டது. 24 மணித்தியாலத்திற்குள் ரொரன்ரோவையும், சுற்றியுள்ள பகுதிகளிலும் 200 மில்லிமீற்றர் மழை பெய்தது. இதன் பின்னர் இப்படியான Hurricane இங்கு ஏற்படவில்லை.

குறிப்பிட்ட வருடத்தில் முதல் உண்டாகும் Hurricane க்கு A. ல் தொடங்கும் பெயரையும், அடுத்ததாக Bயில் தொடங்கும் பெயரும் தொடர்ந்து C,D,E இப்படியாக பெயர்கள் வைப்பார்கள். இந்த வருடம் முதல் Hurricane க்கு Arlene எனவும், இரண்டாவது Bret எனவும், மூன்றாவது Cindy, நான்காவது Dennis, பின்னர் Emily, Floyd, Gert, Hurrey என பெயரிடப்பட்டது. 2004 ம் ஆண்டு வரை பெயர்களை இப்போதே தெரிவு செய்து விட்டார்கள். ஆண் பெயரும், பெண் பெயரும் மாறி மாறி வரும்.

Hurricane ன் கடும் காற்றைவிட அதனுடன் ஏற்படும் Storm Surge எனப்படும் பெரும் அளவில் மழை அல்லது தண்ணீர் கொட்டப்படுவதுதான் பெரும் அழிவை எற்படுத்தும் மழைபோல் அல்லாது தண்ணீர் பெரும் அளவில் குறைந்த நேரத்தில் விழுவதால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு பெரும் சேதமும், அழிவும் ஏற்படும். ஆகக் கூடிய அளவில் 15 அடி உயரத்திற்கூட வெள்ளம் ஏற்படும் அளவு நீரும் விழக் கூடும்.

பூகம்பத்தை போல் அல்லாத Hurricane ஐ ப் பற்றி முன்கூட்டி வானிலை அவதான நிலையம் தெரியப்படுத்தக்கூடியதாக இருக்கிறது.

**விஜே குலத்துங்கத்தின் "அறிவுக்கு வேலை கொடு" வானொலி நிகழ்ச்சியை CTR வானொலியில் ஒவ்வொரு புதன் இரவு 8 மணி முதல் 9 மணி வரை கேட்டு மகிழலாம்.**

***************************************************************

"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் - 6 SCARFAIR PATHWAY, SCARBOROUGH, ONT. M1B 4G2 என்ற விலாசத்திற்கு அல்லது wijey@ interlog.com என்ற விலாசத்திற்கு E-Mail ஐ எழுதி அனுப்பவும்.


10 வருடங்களாக தமிழர் மத்தியில்

**யோகாஸ்**

☎: (416) 267-0408


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 100

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | ■ | | 2 |
| | ■ | ■ | ■ | | 3 | ■ | |
| 4 | | | | 5 | | ■ | |
| | ■ | ■ | ■ | ■ | | ■ | |
| | | 6 | ■ | 7 | ■ | | 8 |
| ■ | ■ | 9 | | | 10 | 11 | |
| | ■ | ■ | ■ | | 12 | ■ | ■ |
| 13 | | | | ■ | | | 14 |

**இடமிருந்து - வலம்**

1. கண்ணுக்கு இடும் மை
2. சட்டம் (வல - இட)
3. நான்கு பக்கமும் நீர் சூழ்ந்த நிலம் (வல - இட)
4. உறவினர்
6. தலை (வல - இட)
8. ஒத்துக்கொள்ளல் (வல - இட)
9. தர்க்கம்
12. மனைவி (வல - இட)
13. விவசாயம்
14. தாய் (வல - இட)

**மேலிருந்து கீழ்**

1. கிளி
2. வேறுபாடு
3. முடிவு
5. பாய்தலின் பெய■ எச்சம்
7. இலக்கணத்தில் ஒரு சொல்லின் இறுதிப்பகுதி
9. படி (கீழ் - மேல்)
10. மணம் (கீழ்-மேல்)
11. நிற்பாட்டு (கீழ் - மேல்)
13. மூங்கில் (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் OCTOBER 27, 99க்கு முன்னர் விளம்பரம் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பா | ர் | ப் | ப | ன | ன் | ■ | அ |
| த | ■ | ■ | ழ | ■ | ■ | ■ | ந் |
| ர | ■ | சு | மை | ■ | சு | ரி | த |
| ட் | ■ | வை | ■ | ம் | ■ | ■ | ப் |
| சை | ஓ | ■ | ம் | ன | த | ரா | பு |
| ■ | ■ | ம் | ச | வ | க | ■ | ர |
| ண் | ■ | ■ | ர | ■ | வ | ல | ம் |
| க | ட் | டை | வி | ர | ல் | ■ | ■ |

**#99இல் வெற்றி பெற்றோர்**

1) S. Rajaratnam, Etobicoke, Ont.
2. S. Vayantharasapillai, Scarborough, Ont.


இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொரு
உடன் ஆட்டிறைச்சி, கோழி, மாடு, மீன், கண
மற்றும் சகல விதமான உணவுப் பொருட்களுக்கு
நாடுங்கள்

**TAMIL INSURANCE CLAIMS CONSULTANT**

தமிழில் இலவச ஆலோசனை

வாகன விபத்து அல்லது வீடு விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?

*தகுந்த ஆலோசனை *சட்ட உரிமை *உரிய நஷ்ட ஈடு
*விபத்துக்குள்ளாலியவர் சம்பள இழப்பீடு
*மற்றும் நுணுக்கமான ஆலோசனைகளும் அறிவுரைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த முறையில் பெற்றுக்கொள்ள 12 வருடகால அனுபவமுள்ளவர்

**ரவி நடராஜா**

TEl:(416) 245-6555 Fax: (416) 245 7766
2095 Weston Rd. #201 (South of HWY 401) Toronto Ont. M9N 1X7



**DMR**



துரித பணமாற்று சேவை

இலங்கை இந்தியா
சிங்கப்பூர் ஐரோப்பிய நாடுகள்


ஆகியவற்றிற்கும் பணம் அனுப்ப அல்லது அங்கிருந்து எடுத்து வர உடன் தொடர்பு கொள்ளுங்கள்

Tel: (416) 264-8019
262 Markham Road , Scarborough, Ont.
( மேல் மாடி / 2nd floor)

# APPLEMORE AUTOMOTIVE

**DETAILING**
**Motor shampoo**
**Interior shampoo**
**Exterior wash & waxing**

ONTARIO'S DRIVE CLEAN




**Repairs**
**safety certification**
**overall maintenance**
**under coating &**
**Rust proofing**

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு அழையுங்கள்

முகவரி: **2500 LAWRENCE AVE. EAST, UNIT #11**
**SCARBOROUGH, ONT.** (MIDLAND & LAWRENCE)

☎ (416) **285-4998**

---

## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")

* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING





*>Railing > Fencing >Welding*

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) **638-2796**

18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5

---



## AJI AUTO WORKS

❋ **Mechanical** ❋ **Auto Electrical Repairs**
❋**Specialized Brakes** ❋**Major & Minor Repairs on Import and Domestic Cars**
❋ **saftly Inspection Certification**
**VEHICLE EMISSIONS INSPECTION**

ONTARIO'S DRIVE CLEAN

**T. Sabanathan**
**T. Sivapatham**

**Tel: 752-2642**
**151 Nantucket Blvd, Unit 5,**
Scarborough. Ont. M1P 4R5

---

## ஓரிடத்தில் வாங்கிய வாகனத்தை இன்னோர் இடத்திற்கு Service க்கு கொண்டு போகலாமா?



பலரினதும் மனதில் உள்ள ஒரு விடயம் என்னவென்றால், நாம் ஒரு இடத்தில் வாகனத்தை வாங்கினால் அதே இடத்தில்தான் Service க்கு போகவேண்டும் என்பது. அது முற்றிலும் தவறான ஒரு முடிவாகும். நாம் வாகனம் ஒன்றை வாங்கும்போது நமது இனத்தவர் ஒருவர் எங்கு வேலை செய்கிறார் என்று பார்த்து அங்கு போய் வாங்குவது புத்திசாலித்தனமான விடயமாகும். சிலர் கேட்கலாம் ஏன் எமது இனத்தவர்களிடம் வாங்க வேண்டும் என்பது.

எமது இனத்தவர்களிடம் செல்லும் போது;

1. எமது சொந்த மொழியில் உரையாடலாம்.
2. நல்ல விலையையும் பெற்றுக்கொள்ளலாம்.
3. எமக்கு தெரியாத பல விடயங்களை தெளிந்து கொள்ளலாம்.
4. ஏதும் பிரச்சனைகள் என்று வரும்போது நம்மவர் நமக்காக உதவிக்கு நிற்பார்கள் (அதாவது உத்தரவாதத்தின் செலவில் பழுதுகளை திருத்தி அமைப்பது)
5. நாம் வாகனம் வாங்கும் போது கிடைக்கும் சிறிய தொகையை நம்மினத்தவருக்கு கிடைக்கச் செய்தல்
6. தேவையற்ற செலவுகளை குறைத்தல்.

இப்படியே அடுக்கிக் கொண்டே போகலாம். வாகனத்தை வாங்கியபின் அந்த வாகனத்தின் Service க்கு உங்கள் வீட்டிற்க்கோ, வேலைக்கோ அருகில் உள்ள இடத்திற்க்கு செல்லலாம். மேலதிக விபரங்களுக்கு- **சோதீஸ்** *Cell* (416) 704 -1179

---

*We are entering 5 th year service in Scarborough.*



## Better Work ... Less Money

## N.T.E Auto Inc.

New Trade Engineering

**We service**
EUROPEAN, JAPANESE & DOMESTIC cars.
we are not just a Dealership.

**" FULLY LICENSED CLASS 'A' MECHANICS ON DUTY "**


We will reduce the worry and expense of maintaining your car by offering:

- Mechanical, Auto Electrical Repairs
- *Air Conditioning Service & Repairs*
- Mechanical Safety Inspection & Certification
- Minor & Major Repairs on European, Japanese & Domestic Cars
- Specializing in BMW
- Parts - repairs rather than replace when possible
- Free Estimates

**என். ரி. ஈ. ஓட்டோ இங்.**

**NTE AUTO INC.**
New Trade Engineering

151 NANTUCKET BLVD, UNIT: 12
SCARBOROUGH, ONT.
☎ **(416) 750 - 1573**
**SIVABALAN**




---

## YARLCAN

### STEAM CLEANING





உங்கள் சகலவிதமான
**Cleaning**
தேவைகளுக்கும்
அழையுங்கள்
மோகன்

**Tel: 724-9085**
**Pager : 600 -0335**
**Cell: 721-9709**

# ஆரோக்கிய வாழ்வு (42)



- *N.* செல்வசோதி

## மன இறுக்கத்தை (Stress) குறைப்பது எப்படி?

"விளம்பரம்" வாசகர்களே நாம் எல்லோரும் தெரிந்தும தெரியாமலும் இன்றைய நவீன வாழ்க்கையில் வாழ்ந்து வருகிறோம். அதனால் தொடர்ந்தோ எப்போதாவதோ மன இறுக்கத்திற்கு உள்ளாகின்றோம். மன இறுக்கம் (Stress) ஏற்பட பல காரணங்கள் உள்ளன. நமது உடலின் இயக்கங்களும், அமைப்பும், உணவு முறையும் சுற்றுப்புற சூழல் போன்றவற்றால் ஏற்படும் அதே நேரம் மனிதனின் மனமும் உடலும ஒன்றையொன்று சார்ந்தவையே இவற்றில் மனத்தின் செயல்கள் பாதிக்கப்பட்டால் உடலின் செயல்கள் பாதிக்கப்படும். அதேபோல் உடலின் செயல் பாதிக்கப்பட்டால் மனதின் செயலிலும் பாதிப்பு ஏற்ப்படும். இவற்றைப் பார்க்கும் போது உடலின் உறுப்புகள், மூச்சு, ரத்த ஓட்டம் ஜீரணம் நரம்புகள், நாளமில்லா சுரப்பிகள், எலும்புகள், சிறுநீரகம், பிறப்பு உறுப்புகள் போன்ற பல பிரிவுகள் உள்ளன. இந்த மண்டலங்களின் இயக்கத்தை வைத்துத் தான் உடல சரியான இயக்கத்தை பெறும். இதில் ஏதாவது ஒரு மண்டலத்தின் இயக்கம பாதிக்கப்படின் உடல் பக்க விளைவுகளை சந்திக்கும் இதனை யோகா ஒன்றினால் மட்டும் தான் மாற்ற முடியும். நம் கண்ணால் பார்க்கக கூடியவைகளையும் காதால் கேட்பவற்றையும் மன அலைகளாக மூளையிலுள்ள மன நினைவு இருக்குமிடத்தில் பதிவு செய்யப்படுகிறது. இந்த மன நினைவு இருப்பிடம் தான் ஒருவனின் அறிவு, நடத்தை, நினைவு ஆற்றல் போன்றவைக-ளைச் சரியான அளவில் செயல்பட பெரிதும் உதவுகிறது.

எண்ண அதிர்வுகள் மூளையின் வெளிபுறப் பகுதியில் உள்ள இருப்பிடத்தில பதிவு செய்யப்பட்டு இயக்குபவை. இந்த இருப்பிடம் சரியான முறையில் இயங்கத் தவறினால் எண்ணம், அறிவு, நினைவு போன்றவற்றால் ஏற்படும செயல்கள் இயங்காது. இந்த இருப்பிடத்திலுள்ள நரம்புகளும் கிளை நரம்புகளும்தான் இந்த இருப்பிடத்தை ஊக்குவிக்கவோ செயல்படவோ செய்கிறது.

### உடல் இயக்க சூழ்நிலையால்

உடலிலுள்ள உறுப்புகளின் செயல்முறைகள் கிருமிகளின் தாக்குததால் உண்டாகும் நோய்களாலும் அமைப்புக் கோளாறுகளாலும் நரம்புகளில் பாதிப்பு ஏற்படுகிறது. இதனால் தலைமை நரம்பு மையங்களும் பாதிப்புக்குள்ளாகிறது. இக் காரணத்தால் இயக்க உறுப்புகளின் செயல் பாதிப்பதோடு கை, கால்கள் நடுங்கத் தொடங்குகின்றன. மனக் கட்டுப்பாட்டு மையம் பாதிப்பால் மனக் கலக்கம், எரிச்சல், மனச்சோர், தூக்கமின்மை போன்றவைகள் உருவாகும். உடலிலுள்ள உறுப்புகளின் செயல்முறை கோளாறுகளுக்கு மருத்துவ ரீதியான சிகிச்சை பெறலாம். எனினும் பிராணாயாமப் பயிற்சி (Breathing Technique) முறை இதற்கு நிரந்தரமான நல்ல விளைவுகளைக் கொடுக்கும்.

நாம் சகல சத்துக்களும் அடங்கிய உணவுகளை உண்ண வாய்ப்புகிட்டாது. நமது உணவு பழக்க வழக்கம், வசிக்கும் சூழ்நிலையும் பருவ நிலைக்கு ஏற்ப அமைந்துள்ளன. தமிழர்களது உணவு முறையைப் பொறுத்தவரை தெற்கு ஆசியா (இலங்கை) குறிப்பாக மிக உஷ்ணமான பகுதியாதலால் உடல் எளிதில் ஜீரணித்துக் கொள்கின்ற உணவு வகைகளை உட்கொள்ளப் பழகியிருந்தோம். இது கனடாவின் காலநிலைக்கு ஒத்துவராதுள்ளது. இதற்காக உணவு முறைகளை மாற்றியமைக்கும் போது உடல் பிரச்சினைக்குள்ளாகிறது. இதனால் சமிபாட்டுக் கோளாறு, வயிற்றுப்போக்கு, வாயுத்தொல்லை என்பன உருவாகிறது.

சமிபாட்டுக் கோளாறு காரணமாக மத்திய நரம்பு மண்டலங்கள் பாதிப்புற்று அதனால் மனக்கட்டுப்பாடும் பாதிப்புக்குள்ளாகிறது. இதனால் ஏற்படும் மன எரிச்சல், தூக்கமின்மை போன்றவற்றால் மன இறுக்கம் உருவாகிறது. இதனைக் குறைக்க உணவு முறைகளை மாற்ற வேண்டும். அடுத்து மனோதிடத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு யோகாசனம், பிராணாயாமப் பயிற்சிகள் பெரிதும் உதவும்.

### சுற்றுப்புறச் சூழல்

வசிக்கும் இடம் சுகாதார வசதி, காற்றோட்டவசதி என்பன இல்லாதுவிடின உடலும் மனமும் பாதிப்புக்குள்ளாகும். ஒரு மனிதன் அதிக வேலை காரணமாகவும், மாணவர்கள் அதிகமாக படிப்பதன் காரணமாகவும் உடல சோர்வு, நரம்புத் தளர்ச்சி இவைகளால் அவதிப்படுகின்றனர். இதனால் இயல்பான வாழ்க்கை முறை பாதிக்கப்படுகிறது. இதுவும் மனஇறுக்கத்திற்கு ஏதுவாகிறது. இதனைப் போக்க தங்கும் இடத்தை காற்றோட்டமாகவும சுத்தமாகவும், இரைச்சல் போன்றவை இன்றியும் வைத்துக் கொள்வதோடு தனது சக்திக்குத் தகுந்தபடி வேலைகளைச் செய்யப் பழக வேண்டும். இதனால் மன இறுக்கத்திலிருந்த விடுபட வாய்ப்பு உருவாகும். இனி வேறு காரணங்களையும் அடுத்து வரும் அத்தியாயங்களில் பார்ப்போம்.

*- நன்றி யோகக்கலை*


**யோகாசன வகுப்பு**

கடந்த ஞாயிறு, செப்டம்பர் 19, 99 ந் திகதியிலிருந்து
யோகாசன வகுப்பு நடைபெறுகின்றது
இடம்: Woburn Collegiat e (Markham /Ellesmere)
நேரம்: 7:30 am - 8:30am தொடர்புகளிற்கு - சத்தி: 291-5853


*அறிந்திருக்க வேண்டியவை*

*திருமுறைகள் ஓதுபவர்கள் தகைமைகள் யாது?*
*சிவதீட்சை பெற்றவராய் , பண்முறை தெரிந்து பாடுபவர்களாய் கேட்போரைப் பக்தியடையச் செய்பவராக, பாடல்களின் பொருளையும் தெய்வீகத் தன்மையையும் உணர்ந்தவராய் இருப்பது நன்று.*


**Neelam SILK**

வட அமெரிக்காவில் உயர்ந்தரப் பட்டுப் புடவைத் தெரிவிற்கு ஓர் சிறந்த புடவை மாளிகை

**நீலம் சில்க்**

அனைத்து மக்களின் அன்பான நல்லாதரவுடன் 8வது ஆண்டில் வெற்றிப் பாதம்பதிக்கும் நீலம்சில்க்



- கிரிஜாவின் சௌந்தர்யா ரை அன் டை
- கிரிஜாவின் சிம்போனி கிறேப் சில்க் சாறிகள்
- கிரிஜாவின் பிரதீபா 2 கலர் தாவணி ரிசு சேலைகள்
- கிரிஜாவின் சுவாயம்வர் ரிசு (Custom Made Special Jari)
- மினி அபூர்வா சேலைகள்

கோலம், ரங்கோலி, அபூர்வா, காஞ்சியின் புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள் "நீலம் சில்க்"

"தமிழர் மத்தியில் ஓர் தரமான பட்டுப்புடவை மாளிகை"

1453 GERRARD STREET EAST
(Indian Bazzar)

CALL: (416) 778- 7455
FAX: (416) 778-8484



**ஞானம்ஸ் ஸ்ரூடியோ**

Introducing 1Hour Photo Lab: 3X5 & 8X12



Professional Photographer - கதீர்
☎: (416) 750-8118
2381 EGLINTON AV. E.
KENNEDY/ EGLINTON, SCARBOROUGH



**கிராமத்து விருந்து**



RESTAURANT, CATERING, TAKE OUT L.L.B.O.

603 Kennedy Road,
Scarborough, Ont.
☎: (416) 266-4240

கனடாவில் முதன் முதல் தலைவாழையில் விருந்து படைத்தவர்கள்


OCTOBER 01ந் திகதி முதல் OCTOBER 31ந் திகதி வரை

விஷேட விலைக் கழிவுகள்

| | |
|---|---|
| 1 குழல் பிட்டு, மீன் குழம்பு, சம்பல், பருப்பு ---------- | $4.99 |
| 1 குழல் மொக்கன் ஸ்ரைல் பிட்டு -------------------- | $3.99 |
| 4 யாழ்தோசை, சாம்பர், சட்னி --------------------- | $2.99 |
| 1 குழல்பிட்டு, மரக்கறி குழம்பு, சம்பல் பருப்பு ------ | $3.99 |
| மசால தோசை, சட்னி, சாம்பர் ------------------ | $3.99 |
| கொத்து ரொட்டி, ஆடு, மாடு, கோழி, மரக்கறி ------ | $3.99 |
| இடியப்ப கொத்து " " " ---- | $3.99 |
| பிட்டு பிரியாணி - ஆடு, கோழி, மாடு ---------------- | $5.99 |
| சிங்கப்பூர் நூடில்ஸ் - சிக்கன் ---------------------- | $4.99 |

இப்போது கிடைக்கின்றது. சுடச்சுட அப்பம் ½ விலையில் கிடைக்கின்றது.
கேட்டறிங் ஓடர்களுக்கு அழையுங்கள் ஜோசப் - 416-266-4240

# முத்துக்குறள் மூன்று



**ஜோதிட விஞ்ஞானி, வைத்திய கலாநிதி,**
**பேராசிரியர் C.S.S. சோமசுந்தரம்**

உலகிலே மக்கள் அதிகமாக பேசுகின்ற மொழிகளிலே 21வது இடத்தை தமிழ்மொழி காலக்கட்டளையால் வகித்தாலும் அது உலகின் முதல் மொழி என்பதை யாரும் மறுக்கவோ, மறைக்கவே முடியாது. கல்தோன்றி மண்தோன்றா காலத்தே முன்தோன்றிய மூத்த மொழி என்பதற்கு ஆதாரம் உலக மொழிகள் அத்தனையிலும் தமிழ் மொழி செறிந்துள்ளதை ஆராய்ச்சியாளர்கள் கண்ட முடிவு. லெமோறியாக் கண்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் இனம் ஆறுதடவைகள் கடற்கோளினால் அழிக்கப்பட்டு அவ்வழிவன்போது உலகின் பலபாகங்களிலும் பரவிப்படர்ந்து வாழ்ந்தார்கள். இற்றைக்கு 25 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இமயமலையும், கங்கை நதியும் இருக்கவில்லை. தமிழன் வாழ்ந்த லெமோறியாக் கண்டத்திலே பஃறுழி ஆறும், குமரிமலை என்னும் பெரிய மலையும் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. சிலப்பதிகாரத்திலே உள்ள காடு காண் காதையிலே.

**" வடிவேல் எறிந்த வான்பகை பொறாது**
**பஃறுழி ஆற்றுடன் பன்மலை அடுத்தத்துக்**
**குமரிக் கோடும் கொடுங் கடல் கொள்ள"** என்று இளங்கோ அடிகள் சிலப்பதிகாரத்திலே குறிப்பிட்டுள்ளது உற்றுநோக்கற்பாலது. இப்படியாக வான்புகழ் கொண்ட பழந்தமிழ் மொழி ஆயிரம் ஆயிரம் புலவர்களாலும், மன்னர்களாலும் வாழையடி வாழையாக சங்கம் வைத்து வளமாக வளர்க்கப்பட்டது. அப்படி அவர்கள் எழுதிய பல பொக்கிஷங்கள் கடற்கோளினால் அழிந்துவிட்டன. அப்படி அழியாமல் காப்பற்றப்பட்ட தெய்வத்திருமறையே திருக்குறள் ஆகும்.

**"சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடுந் துன்பஞ்**
**சுடச்சுட நோற்கிற் பவர்க்கு"** இதிலே நாம் என்னத்தைக் கற்றுக் கொள்கிறோம்! தங்கத்தைச் சுடச் சுட புடம் போட்ட சொக்கத் தங்கமாக மாறுகிறது. வைரத்தை வெட்ட வெட்ட ஒளிகூடுவது போல் மனிதனுக்கு வரும் துன்பங்கள் ஒவ்வொன்றையும் போராடி வெல்லும் பொழுது மனிதன் மேலும் மேலும் அறிவொளியையும் ஆன்மீக பலத்தையும் பெறுகிறான்.

பிரச்சனைகளைப் போராடி வெல்ல முடியாத நிலையில் பைத்தியமாகி மனமுடைந்து தானும் கெட்டு தன்னைச் சார்ந்துள்ளவர்களையும் துன்பத்துக்குள்ளாக்கி மேலும் பலபிரச்சனைகளை உருவாக்குகிறான். ஒரு பிரச்சனை தீர்ந்ததும் ஓய்கிறோம். அதற்காக பிரச்சனை ஓயாது. கருவறையிலிருந்து கல்லறை வரை பிரச்சினை பிரச்சினை தான். பிரச்சினைக்குப் பஞ்சமில்லை. அதற்காக மனிதன் வாழாமல் இல்லை. அந்த பிரச்சனைகளை வெட்டி ஆடி வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். கடலிருக்கும் வரை அலை இருக்கும், மூக்கிருக்கும் வரை சளி இருக்கும், ஆசை இருக்கும் வரை துன்பம் இருக்கும் அதேபோல் வாழ்விருக்கும் வரை ஒன்றுமாறி ஒன்றென பிரச்சினைகள் வந்துகொண்டேதான் இருக்கும். அதற்காக வாழ்க்கையை நாம் வெறுக்கவோ, விட்டுவிட்டு ஓடவோ, விரக்தியடைந்து சாகவோ முடியுமா? எப்படியோ வாழத்தான் வேண்டும். அழுதும் பிள்ளையை அவளேதான பெறவேண்டும்? என்று பழமொழி சொல்வார்கள். அவரவர் பிரச்சனைகளை தாமே வென்று உலகிலே வாழக் கற்றுக் கொள்ளவேண்டும்.

**"கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை**
**நீட்டி அளப்பதோ கோல்"** வள்ளுவர் கூறுகிறார்; தீமை வந்தால் அதிலும் ஒரு நன்மை உண்டு. அந்தத் தீமைதான் நண்பர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று அளந்து காட்டும் கருவியாகிறது.

துன்பத்திலும் இன்பம், படிப்பனை, ஒரு அறிவு, நம்பிக்கை உண்டு. ஆகவே துன்பத்தில் இன்பம், இன்பத்தில் துன்பம் என்பதை வாழ்வின் நியதிகளும் நீதிகளும் என்பதை நன்கு உணர்ந்து வாழக் கற்றுக்கொள்ளுங்கள். மனிதனுக்குள்ளே தெய்வசக்தி ஆழ்ந்து கிடப்பதையும் மனிதன் நல்ல பல முயற்சிகளை மேற்கொண்டு தன்னுள் ஆழ்ந்து கிடக்கும் தெய்வசக்கியை வெளிக்கொணர்வதுடன் தெய்வநிலைக்கு மனிதனும் உயரலாம் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. யேசுவும் புத்தரும், காந்தியும் அதேநிலையே.

மனிதனுக்கு இருக்க வேண்டிய முக்கியமான பண்புகளுள் மிக முக்கியமானது பொறுமை. **"பொறுமை கடலிலும் பெரிது"** என்பது எவ்வளவு உண்மை. **"பொறுத்தார் அரசாழ்வார்"** என்பது ஒரு பழமொழி. பஞ்சபாண்டவர் 13 வருடங்கள் கானகத்தில் அலைந்தும் மீண்டும் அரசாண்டார்கள். ஸ்ரீ இராமபிரான் 14 வருடங்கள் பொறுமையுடன் காத்திருந்து மீண்டும் அரசாண்டார். நிச்சயம் ஒவ்வொருவரும் பொறுமையை இழக்கவேண்டிய சந்தர்ப்பங்கள் ஆயிரம் ஆயிரம் வரும் அத்தனை கட்டத்திலும் பொறுமையுடன் இறைவன் திருவடிகளை வணங்கி அமைதி பெற முனையுங்கள் நிச்சயம் ஆறுதல் அடைவீர்கள். உண்மையிலே பொறுமையைக் கடைப்பிடிப்பது என்பது மிகமிகக் கஷ்டமானது. ஆனால் அதைக் கடைப்பிடிப்பது என்பது சத்திய சோதனைதான். ஆனால் அதைக் கடைப்பிடித்து விட்டாலோ நீங்கள் மகான்களாகவே மாறிவிடுவீர்கள். ஆகவே பொறுமை பொறுமை நிதம் வேண்டும். இப்பொறுமை உங்களை உலகாள வைக்கும்.

பொறுமைக்கு பூமாதேவி என்பார்கள். தன்மீது குழி பறிப்போரையே தாங்குகின்ற பூமியை போல் தம்மை இகழ்ந்து பேசுகிறவர்களின் செயலையும் பொறுத்துக் கொள்வதே தலைசிறந்த பண்பாகும். இதுதான் சிறந்த அறம். அவர்களுடன் சண்டை சச்சரவு செய்து என்ன பயன். மனஅமைதி தான் போகும். விட்டுவிடுங்கள், விட்டுக்கொடுங்கள். நிச்சயம் வெற்றி உங்களுக்கே, புண்ணியமும் உங்களுக்கே. **"அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தன்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை"** எனவே நாம் என்ன செய்ய வேண்டும். என்னதான் அளவு கடந்து தீங்கு செய்தாலும் அவற்றையெல்லாம் நாம் தான் பொறுக்க வேண்டும். அவர்கள் இப்படிச் செய்துவிட்டார்கள் என்று எண்ணாமல் உடனே மறந்து விடுதல், பொறுத்துக் கொள்ளுதல் மிகவும் சிறந்த பண்பாகும். (தொடரும்)


**வெள்ளை மயிரிற்கு - விடுதலை**

இந்தியாவில் மூலிகைகள் மூலம் தயாரிக்கப்பட்ட தரத்தில் சிறந்த சாயம் (DIE) இப்பொழுது இங்கு கிடைக்கின்றது. பாவித்த பலர் புகழ்கிறார்கள். முகத்தில் சாயம் பிடிக்காது. இலகுவாக பூசமுடியும். கறுப்பு, மண்ணிறம் நிறங்களில் கிடைக்கும். மேலதிக தொடர்புகளிற்கு

☎: (416) 267-0314 / Cell: 707-8956


6 வருடமாக இயங்கிவரும் ஸ்தாபனம்

**அப்சராஸ்**



**RESTAURANT & CATERING**

* கொத்துரொட்டி எல்லா வகைகளும் $3.50 (TAKE-OUT ONLY)
* வாழை இலைச் சாப்பாடு $6.00 ( " )
* "மண்வாசனை" வாழை இலைச் சாப்பாடு
* எல்லாவகையான வைபவங்களிற்கும்



அழையுங்கள் (416) 412-6164

2778 Kennedy Road, Scarborough, Ont. (Kennedy/Finch)



**நான் ஒரு வழக்கறிஞர் இல்லை**

குடிவரவுச் சட்டம்
**Immigration Law**

**குற்றவியல் சட்டம்**
**Criminal Law**

குற்றவியல் தண்டனை பெறுவதனால்....




உங்கள் வதிவிட உரிமை
- Permanent Resident

குடியுரிமை
- Citizenship

குடும்ப ஒன்றிணைவு
- Family Sponsorship

பாதிக்கப்படலாம்.



*வாகன விபத்தில் பாதிக்கப்பட்டீர்களா?*

அடுத்து செய்யவேண்டியது என்ன?



முதலில் வைத்தியசாலைக்கு செல்லுங்கள்...

**பின் இவரை அழையுங்கள்...**

எஸ்.கே. தீசன்
(416) 631-6322

**விளம்பர வினாடி வினா**

இந்தப் போட்டி நிகழ்ச்சி பிரதி வாரந்தோறும் ஞாயிற்றுகிழமை மாலை 7:30 மணியளவி 24 மணிநேர தமிழ் வானொலியில் கேட்கலாம்

இப்போட்டியின் நோக்கம் - "தமிழ் மக்களின் அறிவையும், ஆற்றலையும் வளர்ப்பதே இந்நிகழ்ச்சியின் நோக்கமாகும்"

பெயர் - விளம்பர வினாடி வினா!
நிகழ்ச்சி - ½ மணி நேரம்
பரிசு - $25 பெறுமதியான பத்திரம் (Voucher)

குறிப்பிட்ட வியாபார ஸ்தாபனத்தில் பாவிக்க முடியும்

நிபந்தனைகள் -

1. 10 கேள்விகள் கேட்க்கப்படும். 7 இற்கு மேற்பட்ட வினாக்களிற்கு விடை தரவேண்டும்
2. 5 வினாடிகள் வழங்கப்படும் நிகழ்ச்சி நடத்துபவரின் முடிவே இறுதியானது.
3. குறிப்பிட்ட நிகழ்ச்சியில் ஒருவரிற்கு மேற்பட்டவர் 7 அல்லது 7 இற்கு மேற்பட்ட வினாக்களிற்கு சரியாக விடை கூறினால், அவரே வெற்றி பெற்றவராக கொள்ளப்படும். மேலும் இரண்டிற்கு மேற்பட்டவர்கள் ஒரே எண்ணிக்கையான சரியான பதில்கள் கூறினால், நிகழ்ச்சி நடத்துனர் குலுக்கல் மூலம் ஒரு அதிஸ்டசாலியை தெரிவு செய்வார்.

குறிப்பு

1. வினாக்களின் விடைகள் ஏற்கனவே விளம்பரம் பத்திரிகையில் வந்திருக்கும்.
2. வினாவிற்குரிய விடை ஒன்றிற்கு மேற் பட்டதாக இருப்பினும் விளம்பரம் பத்திரிகையில் வந்தவிடையே சரியெனக் கொள்ளப்படும்.
3. இப்போட்டி நிகழ்ச்சி விளம்பரம் பத்திரிகையின் ஆதரவில் நடைபெறுகின்றது.

பரிசு வழங்கும் நிறுவனம்

இந் நிகழ்ச்சிகளில் வெற்றி பெறுபவர்களிற்கு சபோனா ஸ்தாபனத்தில் பாவிக்க கூடிய பத்திரம் வழங்கப்படும். ஒவ்வொரு பத்திரமும் $25 பெறுமதியானவை.

# விளையாட்டுத் தகவல்கள் (39)


*-எஸ். கணேஷ்*



## உலகிலேயே யார் சிறந்த பெண் Tennis வீரர்?

## Tennis

தற்சமயம் டெனிஸ் விளையாட்டு உலகத்திலேயே மிகப் பிரபல்யம் பெற்று வருகின்றது. முக்கியமாக Australian Open, French Open, Wimbledon, U.S. Open ஆகிய சுற்றுப் போட்டிகளை Grand Slam Titles என கணிக்கப்படுகின்றது. இவ்வருடம் இச்சுற்றுப் போட்டிகளில் பலத்த போட்டியும் எதிர்பாராத திருப்பங்களும் ஏற்பட்டது. மிக முக்கியமாக Grand Slam Titleகளினை 22 தடவை வென்ற ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த பெண் வீராங்கனையான Steffi Graf (30 வயது) Grand Slam Tennis போட்டிகளில் இருந்து இளைப்பாறுவதாக அறிவித்துள்ளமை Tennis ரசிகர்களிடையே பெரும் அதிர்ச்சியை உண்டு பண்ணியுள்ளது. இவரே உலகத்தில் பெண்களில் அதிக வருடங்கள் (367 வாரங்கள்) உலகின் முதலாமிடம் பட்டத்தை தக்க வைத்தவராகும். 1997 - 1998ம் ஆண்டு பகுதிகளில் இவரது ஆட்டங்கள் சுகவீனம் காரணமாக தரம் குறைந்து இருந்தது.



**MARTINA HINGIS:**

ஆனால் மீண்டும் 1999 ஆண்டு 2ம் இடத்தை எட்டிபிடித்தார். அத்துடன் மட்டும் இல்லாமல் No 1 வீரர் ஆன Martina Hingisயை இவ்வருடம் French Open இல் வெற்றியும் கொண்டார். இது Steffi Graf இன் 6வது French Open Champion Title ஆகும். இதுவரை French Open இல் பழைய வீராங்கனையான Chris Evert 7 தடவைகள் French Open Champion Title பெற்றமை குறிப்பிடத்தக்கது. இதை தொடர்ந்து நடைபெற்ற Wimbledon இனில் Final வரை வென்று இறுதியாட்டத்தில் Lindsay Davenport இடம் தோல்வி கண்டார். இதை அடுத்து தான் இளைப்பாறுவதாக (Retire) அறிவித்துள்ளார். இதுவரை Wimbledon Champion பட்டத்தை 7 தடவைகள் வென்று உள்ளார். Steffi Graf இன் வெற்றிகளை இங்கு பார்ப்போம்.

1. 22 தடவைகள் Grand Slam Titlesகளை வென்றவர்.
   இதனுள் 7 தடவை Wimbledon மும், 5 தடவை U.S. Openமும், 6 தடவை French Openம், 4 தடவை Australian Openம் அடங்கும்.
2. 367 வாரங்கள் உலகிலேயே முதலாம் இடம் No1 என்னும் பட்டத்தை தக்க வைத்திருத்தவர்.
3. இதுவரை 22 மில்லியன் டொலர்களை வெற்றியின் மூலம் சம்பாதித்தவர்.
4. World Tennis Singles Titles களில் 103 தரம் வென்றவர்.
   இதில் WTA Singles Titles களில் Martina Navaratilova 167 தடவையும், Chris Evert 157 தடவையும் Steffi Graf 103 தடவைகளும் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

| | Aus. Open | Wimbledon | French | U.S. open | Total |
|---|---|---|---|---|---|
| Martina Navaratilova | 3 | 9 | 2 | 4 | 18 |
| Chris Evert | 2 | 3 | 7 | 6 | 18 |
| Steffi Graf | 4 | 7 | 6 | 5 | 22 |

மேற்கூறிய தரவுகளை பார்க்கும் போது பெண்களில் Steffi Grafயே உலகில் சிறந்த பெண் டெனிஸ் வீராங்கனையாக கருத இடமுண்டு. எதிர்வரும் காலத்தில் Martina Hingis, Steffi யின் சாதனைகளை முறியடிப்பாரா என்பது ஐயமே.

1999ம் ஆண்டு நடைபெற்ற Grand Slam சுற்று போட்டிகளில் இறுதி போட்டிகளில் வெற்றி ஈட்டியவர்களை இங்கு பார்ப்போம்.

**1. Australian Open / 99**

**ஆண்கள்**
Yevgeny Kafelniko வெற்றி பெற்றர்
Thomas Enquvisit யை
4-6, 6-0, 6-3, 7-6 (7-1)

**பெண்கள்**
Maintina Hingis வெற்றிபெற்றார்
Amelie Maures Mo யை
6-2; 6-3

**2. French Open / 99**

ஆண்கள்
Andre Agassi வெற்றி பெற்றார்
Andrei Medvedev யை
1-6, 2-6, 6-4, 6-3, 6-4

பெண்கள்
Steffi Graf வெற்றிபெற்றார்
Maritna Hingis யை
4-6, 7-5, 6-2

**3. Wimbledon / 99**

ஆண்கள்
Pete Sampras வெற்றிபெற்றார்
Andre Agassi யை
6-3, 6-4, 7-5

பெண்கள்
Linsay Devenport வெற்றி பெற்றார்
Stffi Graf யை
6-4, 7-5

**4. U.S. Open / 99**

ஆண்கள்
Andre Agassi வெற்றிபெற்றார்
Todd Martin யை
6-4, 6-7, (5-7), 6-7 (2-7, 6-3, 6-2

பெண்கள்
Serena Williams வெற்றி பெற்றார்
Martina Hingis யை
6-3, 7-6 (7-4)

US Open இல் Pete Sampras கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. US Open இன் பின்பு ATP யினால் தரப்படுத்தப்பட்டவர்களை இங்கு பார்ப்போம்.


**ஆண்கள்**


| | | | |
|---|---|---|---|
| 1. | Andre Agassi | (USA) | 4, 470 Points |
| 2. | Yevgeny Kafelnikov | (Russia) | 3, 819 Points |
| 3. | Pete Sampras | (USA) | 3,544 Points |
| 4. | Todd Martin | (USA) | 2, 969 Points |
| 5. | Gustavo Kuerten | (Brazil) | 2, 707 Points |

**பெண்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | Martina Hingis | (SUI) | 2,061 Points |
| 2. | Lindsay Davenport | (USA) | 1,749 Points |
| 3. | Venus Williams | (USA) | 1,569 Points |
| 4. | Serena Williams | (USA) | 1,488 Points |
| 5. | Monica Seles | (USA) | 1,067 Points |
| 6. | Marry Pierce | (FRA) | 909 Points |

US Open 99 Champion பட்டத்தை Serena Williams முதல் தடவையாக வென்று 1959 ஆம் ஆண்டின் பின்பு முதன் முறையாக Grand Slam Title யை வென்ற முதல் கறுப்பின பெண்மணி என்ற பெருமையையும் பெற்று கொண்டார்.


Compu Service
COMPUTERS & NETWORK

(416) 399-3235 - (905) 432-2422
CONTACT - ALAN SIVA
@ (416) 431-3753
(416) 431-4357
(416) 399-3235
COMPUSERVICE International
COMPUTER SALES
NEW & USED
NETWORK DESIGN
& INSTALLATION
REPAIRS
UPGRADES
CD BACKUPS
SOFTWARES
(905) 432-2422 *FAX: (416) 431-5828
Email: compuservice@pathcom.com


TUITION

EXPERIENCED TEACHER IN MATHS & PHYSICS CONDUCT (GROUP / INDIVIDUAL) CLASSES IN CALCULUS, ALGEBRA FINITE MATHS & GEOMETRY FOR O.A.C. STUDENTS & PHYSICS MATHS FOR ALL GRADE FROM 3- 12.
PL. CALL: (416) 431-6774

TUITION

அனுபவம் வாய்ந்த தரமான முதுகலை (M.A.) பட்டதாரி ஆசிரியையினால் KINDER GARDEN இலிருந்து Grade 6 வரையிலான பிள்ளைகளுக்கு Tuition சொல்லிக் கொடுக்கப்படும்
PL. CALL: 755-8034


ANDY THIRUCHELVAM
(செல்வம்)
Assistant Used Car Manager
Sales & Leasing Consultant
Tel: (416) 741-8111 Cell: (416) 418-6076
Tel: (905) 850-8111 Pager: (416) 541-4277
*MAZDA* TOYOTA* HONDA* NISSAN*
போன்ற வாகனங்களின் 1999 Model களையும் மற்றும் சகலரக Used வாகனங்களையும் ஒரே இடத்தில் பார்வையிட்டு தமிழில் பேசி குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

1.9% on All 99 Mazda Models

Lower Financing
OVER 75 USED CARS & VANS AVAILABLE FOR LEASE OR PURCHASE
*BAD CREDIT, NO CREDIT, NO PROBLEM *
NO CREDIT APPLICATION REFUSED
உங்கள் வருமானத்திற்கு ஏற்ப மாதாந்த தவணை முறையில் பணம் செலுத்தக் கூடியவாறு வாகனக் கடனுதவி துரிதமாக ஒழுங்கு செய்து தரப்படும்.
Get in. Be moved mazda
Prima mazda
7635 MARTINGROVE ROAD
WOODBRIDGE (SOUTH OF HWY #7)


# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

*-தொகுப்பு - பரம் & சண்*

### 1966

| | |
|---|---|
| 1. அண்ணாவின் ஆசை | 2. அவன் பித்தனா? |
| 3. அன்பே வா* | 4. இரு வல்லவர்கள் |
| 5. எங்க பாப்பா | 6. காதல் படுத்தும்பாடு |
| 7. குமரிப் பெண் | 8. கொடிமலர் |
| 9. கௌரி கல்யாணம் | 10. சந்திரோதயம் |
| 11. சரஸ்வதி சபதம்* | 12. சாதுமிரண்டால் |
| 13. சின்னஞ் சிறு உலகம் | 14. சித்தி |
| 15. செல்வம் | 16. தனிப்பிறவி |
| 17. தட்டுங்கள் திறக்கப்படும் | 18. தாலிபாக்கியம் |
| 19. தாயே உனக்காக | 20. தாயின்மேல் ஆணை |
| 21.தேடிவந்த திருமகள் | 22. தேன் மழை |
| 23. நம்ம வீட்டு லசுஷ்மி | 24. நாடோடி |
| 25. நாம் மூவர் | 26. நான் ஆணையிட்டால் |
| 27. பறக்கும் பாவை* | 28. பெரிய மனிதன் |
| 29. பெற்றால்தான் பிள்ளையா | |
| 30. மதறாஸ் டு பாண்டிச் சேரி | 31. மகாகவி காளிதாஸ் |
| 32. மணி மகுடம் | 33. மறக்க முடியுமா |
| 34. முகராசி | 35. மேஜர் சந்திரகாந்த் |
| 36.மோட்டார் சுந்தரம்பிள்ளை | 37. யார் நீ |
| 38. யாருக்காக அழுதான் | 39. ராமு |
| 40. லாரி டிரைவர் | 41. வல்லவன் ஒருவன் |

1966ல் வெளிவந்த படங்கள் தொகை 41 ஆகும். மக்கள் திலகம் நடித்து வெளிவந்த படங்கள் ஒன்பது ஆகும். நடிகர் திலகம் நடித்து வெளிவந்தவை இவ்வாண்டு நான்கே நான்காகும். இவற்றுள் இயக்குநர் கே. எஸ். கோபாலகிருஷ்ணன் கதை வசனம எழுதி இயக்கிய 'செல்வம்' கலைஞர் ஏ.பி. நாகராசனின் 'சரஸ்வதி சபதம்' - ஜெமினி ஸ்ரூடியோ தயாரித்த 'மோட்டார் சுந்தரம்பிள்ளை' ஆகிய மூன்றும் 100 நாட்களைக் கடந்து ஓடியவையாகும். 'மகாகவி காளிதாஸ்' சுமாராகப் போனது.

எம்.ஜி,ஆர் அவர்கள் ஏ.வி.எம தயாரிப்பான 'அன்பே வா'வில நடித்து வெள்ளி விழாச் சிறப்புக கண்டார். நடிகவேள் எம்.ஆர் ராதாவும் -எம்.ஜி.ஆரும் துப்பாக்கியால் சுட்டுக் ொகண்ட ஆண்டு இதுவாகும்.

இருவரும் இணைந்து நடித்த இறுதிப் படமான 'பெற்றால் தான் பிள்ளையா' வெளிவந்தும் இவ்வாண்டில் தான் மற்றும் 'சந்திரோதயம்', 'தனிப்பிறவி', 'தாலி பாக்கியம்' 'நாடோடி', 'நான் ஆணையிட்டால்' 'பறக்கும் பாவை', காதல் மன்னன் ஜெனி கணேஷ் அவர்களுடன் இணைந்து எம்.ஜி.ஆர். நடித்த ஒரே படமான 'முகராசி' யும் இவ் வாண்டிற்குரிய படமாகும்.

மற்றும் இலட்சிய நடிகர் எஸ் எஸ். இராஜேந்திரன் நடித்து வெளிவந்த 'அவன் பித்தனா' 'மணி மகுடம்' ஜெமினி கணேசன் நடித்து வெளியான 'தேன் மழை', 'ராமு' 'சித்தி', 'சின்னஞ் சிறு உலகம்' குறிப்பிடத்தக்கவையாகும். ஏ.வி. எம். தயாரிப்பான 'ராமு' வெள்ளி விழாப படமாகும். ஜெயகாந்தனின் "யாருக்காக அழுதான்" பாராட்டுப் பெற்ற படமானது.

இயக்குநர் சிகரம் கே. பாலசந்தரின் நாடகமான 'மேஜர் சந்திர காந்' ஏ.வி.எம் தயாரிப்பாக வெளிவந்து சாதனை படைத்தது. நடிகர் சுந்தரராஜனுக்கு 'மேஜர்" என்ற கௌரவத்தைத் தந்த படமாகும். இப்படத்தில் உள்ள இன்னொரு பாத்திரத்தின் பெயரான 'ரஜினி காந்' பிறகு இயக்குநர் பாலசந்தரால் இன்றைய ... ஸ்ராரான 'சிவாஜி ராவ்' என்ற நடிகரின திரையுலகப் பெயராகப் பிரபலமாயிற்று.




'முகராசி' -ஜெமினி கணேசுடன்

"இயக்குநர் திலகம்" கே. எஸ். கோபாலகிருஷ்ணன் கதைவசனம இயக்கத்தில் 'சின்னஞ் சிறு உலகம்" நடிகர் நாகேஷ் அவர்களுக்குப் புகழ் சேர்த்தது. அதே ஆண்டு கே.எஸ்.ஜி. யின் இன்னொரு படம் 'சித்தி'. ஜெமினி, பத்மினி, எம்.ஆர். ராதா, முத்துராமன் ஆகியோர் நடித்து வெளிவந்த 'சித்தி' பெண்களைக் கவர்ந்த சிறந்த குடும்பப் படமாகும்.

ஜெய்சங்கர் நடித்த 'இரு வல்லவர்' வல்லவன் ஒருவன் 'காதல் படுத்தும் பாடு' 'கௌரி கல்யாணம்' 'யார் நீ' ஸ்ரீதரின் 'கொடி மலர்' நகைச் சுவை நடிகர் J.B. சந்திரபாபுவின் சொந்தப் படமான 'தட்டுங்கள் திறக்கப்படும்' அன்று தமிழ்த் திரையுலகின் அனைத்து முன்னணிக கதாநாயகர்களுக்கும், சிறந்த இயக்குநர்களுக்கும் புகழ் சேர்த்த 1966 ல் வெளிவந்த படங்களாவன....

1966 ம் ஆண்டு சென்னை சினிமா இரசிகர்கள் சங்கம் சிறந்த நடிகராக நடிகர் திலகம சிவாஜி கணேசனையும் (செல்வம்) சிறந்த படமாக 'மேஜர் சந்திர காந்', சிறந்த நடிகையாக திருமதி. பத்மினி (சித்தி0 சிறந்த இயக்குநர் கே. பாலசந்தர் (மேஜர் சந்திரகாந்) ஆகியோரைத் தெரிவு செய்து விருது வழங்கினார்கள்.



பெற்றால்தான் பிள்ளையா'
-பேபி ஷகீலாவுடன்


1966ம் ஆண்டுக்கான ஜனாதிபதியின் 'வெள்ளிப பதக்கம்' ஜெமினி, கே.ஆர். விஜயா நடித்த A.C. திருலோகசந்தர் இயக்கிய 'ராமு' படத்திற்குக் கிடைத்தது. (தொடரும்)

### 1966ம் ஆண்டில் சென்னை சினிமா இரசிகர் சங்கத்தின் விருதுகள் விபரம்

| | |
|---|---|
| படம்: | மேஜர் சந்திரகாந்த் |
| நடிகர். | சிவாஜி கணேசன் (செல்வம்) |
| நடிகை: | பத்மினி (சித்தி) |
| உபநடிகர்: | முத்துராமன் (மேஜர் சந்திரகாந்த்) |
| உபநடிகை: | புஷ்பலதா (ராமு) |
| நகைச்சுவை நடிகர்: | நாகேஷ் (மெட்றாஸ் -டு-பாண்டிச்சேரி) |
| குழந்தை நட்சத்திரம்: | மாஸ்டர் ராஜ்குமார் (ராமு) |
| பின்னணி: | TMS, P. சுசிலா |
| டைரக்டர்: | K. பாலசந்தர் (மேஜர் சந்திரகாந்த்) |


**AIRPORT SERVICE & MOVING VAN**

ஏயர்போட்டிற்கு பிரயாணிகள் போய் வருவதற்கான சேவைகளும், மற்றும் பொருட்களை இடமாற்றம் செய்வதற்கான சேவைகளிற்கு



☎: (416) 759-0557


## நான் வாழப் போகிறேன்

-வீணை மைந்தன்



***அக்டோபர் 1ம் திகதி நடிகர் திலகத்தின் பிறந்த நாள். 71வது பிறந்தநாள். இந்த நூற்றாண்டின் இறுதியில் வரும் பிறந்த நாள் சிறப்பு வாய்ந்தது. அடுத்து 2000 ஆண்டு நிறைந்த ஆயுளுடனும் பூரண சுகத்துடனும் வாழ வாழ்த்துகிறோம்.***

### சுவடு 38

சுமார் பதின்மூன்று படங்களில் சிவாஜிக்கு இணையாகக் குடும்பப் பாங்கான கதைகளில் நாயகியானவர் திருமதி. சரோஜா தேவி அவர்கள். மேலே குறிப்பிட்ட படங்களைத் தொடர்ந்து இரும்புத் திரை, விடிவெள்ளி, புதிய பறவை, ஆலயமணி, வளர்பிறை, இருவர் உள்ளம், குலமகள் ராதை, பார்த்தால் பசிதீரும் போன்ற நல்ல கதைகள் மறக்க முடியாத பாத்திரப் படைப்புக்களைக் கொண்டு வெளிவந்தன.

'இருவர் உள்ளத்தின்' இன்னொரு வடிவமாக அல்லது மலரும் நினைவாக அண்மையில் வெளிவந்த படம் 'ஒன்ஸ் மோர்' (Once More). சில படங்களில் சிவாஜி அவர்களுடன் இரண்டு அல்லது மூன்று கதாநாயகி அந்தஸ்த்தில் உள்ள நடிகைகள் இணைவார்கள். உதாரணமாகப் 'பாலும் பழத்தில்' திருமதி. சரோஜா தேவியுடன் திருமதி. சௌகார் ஜானகியும் உடன் நடிப்பார்கள். இரும்புத் திரையில் சரோஜாதேவியுடன், வைஜந்தி மாலாவும் (கதாநாயகியாக) தோன்றுவார்கள். இப்படங்களில் நடிப்பில் ஆரோக்கயமான போட்டியைக் காணலாம். பாத்திரங்களின் தன்மையைப் பொறுத்தது அது.

1998ம் ஆண்டு சிங்கப்பூரில் சிவாஜி அவர்களுக்கு நடந்த பாராட்டு விழாவில் கலந்து கொள்வதற்காகச் சென்றிருந்த திருமதி. சரோஜாதேவி 'இருவர் உள்ளம்' படத்தில் சிவாஜியின் உருக்கமான நடிப்பைக் கண்டு கலங்கிப்போனதால் தன்னால் (React) ரியாக்ட் செய்ய முடியாமல் போனதைக் குறிப்பிட்டிருந்தார்.

இப்படிப் பல திரைநாயகிகள் சிவாஜி அவர்களுக்கு ரியாக்ட் செய்ய மறந்து நின்ற உணர்ச்சி மிகு சம்பவங்கள் பல உண்டு. தேவை வரும்போது குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

### சுவடு 39 "சிவாஜியும் - டி.ஆர். ராஜகுமாரியும்"

நடிகர் திலகத்தின் திரைக் கதாநாயகிகள் வரிசையில் அவருடன் இணைந்து நடித்த பல மூத்த முன்னணி நட்சத்திரங்களைப் பற்றி எழுதிவரும் இவ்வேளையில் அவருடன் இணைந்து துணைப்பாத்திரமேற்று நடித்த தமிழ்த் திரையுலகின் மூத்த நாயகிகளுள் ஒருவர் என்று பேசப்படுபவரும், அந்தக் கலத்திய "கனவுலகத் தேவதை" என்று முத்திரை பதித்தவருமான திருமதி. டி. ஆர். ராஜகுமாரி அவர்கள் கடந்த September 20, 99 அன்று சென்னையில் அவரது 76 வது வயதில் இயற்கையெய்தியதை நினைவில் கொண்டு சிவாஜியுடனான அவரது சினிமா நினைவுகள் இங்கு பதிவு செய்வோம்.



சந்திரலேகா

"எழுபத்தாறு வயதில் அவர் இறந்தாலும் அவரது கவர்ச்சியான விழிகளுக்கு நிகராக வேறு எந்த நட்சத்திரங்களுக்கும் கூட அவ்வளவு அழகான விழிகள் இல்லை என்று தான் தமிழ்த் திரையுலகில் கூறுவார்கள்". எம்.ஜி. ஆர், சிவாஜி என்ற பிரமிக்கத் தக்க திரையுலகச் சக்கரவர்த்திகளுக்கு முன் கலையுலகில் ஏகபோக ஆட்சி நடத்தியவர்கள் காலஞ்சென்ற ஏழிசை மன்னர், அமரர் பாகவதர் எம். கே. தியாகராஜ பாகவதரும், அமரர். பி.யு.சின்னப்பாவும் என்று திரையுலக வரலாறு கூறுகிறது.

சொந்தமாகப் பாடும் திறமை, நடிப்பு, அழகு என்று யாவரையும் தன்பால் கவர்ந்திழுத்த "ஏழிசை மன்னர்" எம். கே. டி. யுடன் இணைந்து கதாநாயகியாக நடித்து அந்தக் கால இளசுகளான இந்தக் காலப் பெரிசுகளைப் பைத்தியமாக்கிய கவர்ச்சிப் புயல் தான் திருமதி. டி. ஆர். ராஜகுமாரி அவர்கள்.

'கச்சதேவயானி' என்ற படத்தில் தான் (1941) திருமதி. டி. ஆர். ராஜகுமாரி கதாநாயகியாக டைரக்டர் கே. ஆர். சுப்பிரமணியம் (பரதக் கலைஞர் செல்வி. பத்மா சுப்ரமணியத்தின் தகப்பனார்) அவர்களால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். தொடர்ந்து டி.ஆர்.ஆர், எம். கே. டியுடன் இணைந்து நடித்த 'ஹரிதாஸ்' சென்னையில் பிராட்வே திரையரங்கில் 768 நாட்கள் மூன்று தீபாவளித் திருநாட்களைக் கடந்து மாபெரும் சாதனை படைத்தது. அதேபோல் டி.ஆர். ராஜகுமாரி, எம். கே. ராதா, ரஞ்சனுடன் இணைந்த ஜெமினியின் 'சந்திரலேகா' அந்தக் காலத்திலேயே 1948 சுமார் 30 இலட்சம் ரூபாய் செலவில் பிரதிகள் எடுக்கப்பட்டு ஓடிய இன்னொரு சாதனை படைத்த படமாகும்.

இப்படியெல்லாம் எம்.ஜி.ஆர், சிவாஜிக்கு முன்பே புகழ் உச்சியில் இருந்த திருமதி. டி.ஆர். ஆர். அவர்களுக்கு 'மனோகரா' சிவாஜியுடன் இணைந்த ''வசந்த சேனை' பாத்திரமே பிற்காலத்தில் அவர்க்குத் திருப்பு முனையாயிற்று. அதாவது டி. ஆர். ராஜகுமாரி என்றால் 'வசந்த சேனை' யா என்று ஆச்சரியம், வியப்புக் கலந்த பார்வையுடன் அந்தப் பாத்திரமாகவே அவரை விழிக்கத் தொடங்கினார்கள்.

1954ல் வெளிவந்த 'மனோகரா' திரைப்படம் நடிகர் திலகம், கலைஞர் மு.கருணாநிதி இருவரையும் தமிழ்க் கோபுரத்தில் சிங்காசனம் அமைத்து உட்கார வைத்த திரைச் சித்திரம். அந்தப் புகழ் பெற்ற படத்தில் மனோகரா திரைச்சித்திரத்தில் இப்படியொரு காட்சி வருகிறது. மனோகரனும் தாய் பத்மாவதியும்
(காலஞ் சென்ற கண்ணாம்பாவிற்குமான உரையாடல்....)

பத்மா: மனோகரா! நில்... எங்கே ஓடுகிறாய்?
மனோ: அம்மா! இன்னும் என்ன.... உங்கள் சபதத்தை நிறைவேற்றி விட்டபிறகு....!

*(தொடர்ச்சி 12 பக்கம்)*

# MBM TECHNOLOGY INC.

COURSES START ON OCTOBER 01, 99

**A+** **MCSE**

Unlimited Lab Time
Completely hands -on
Pl Call: 750-3244



## நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் (கனடா)

நடாத்தும் **வாணிவிழா - 1999**


எமது ஒன்றியத்தின் வாணிவிழா எதிர்வரும் 16.10.1999 மாலை 6 மணியளவில் 3170 St. Clair Avenue East ல் அமைந்துள்ள Our Lady or Patima Church மண்டபத்தில் நடைபெற இருப்பதால் நடனம், நாடகம், பேச்சு, பட்டி மன்றம் மற்றும் கவியரங்கம் போன்ற நிகழ்ச்சிகளில் பங்குபற்ற விரும்புவோர் நிர்வாக சபையினருடன் தொடர்புகொள்ளவும்.

அத்துடன் விசேடமாக நெடுந்தீவை பிறப்பிடமாகக் கொண்ட ஆசிரியர்களையும், நெடுந்தீவில் கல்வி கற்பித்த பிற இடங்களைச் சேர்ந்த ஆசிரியர்களையும் விழாவில் கௌரவிக்க இருப்பதால் இதுவரை ஒன்றியம் உங்களுடன் தொடர்பு கொள்ளாமலிருந்தால் தயவு செய்து மேற்படி ஆசிரியர்களையும் தொடர்புகொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம். மேலதிக தொடர்புகளுக்கு: 905-9481646 416-740 1415
905-405 1040 416-281 7994


## நான் வாழப்போகிறேன்......

(7ம் பக்க தொடர்ச்சி)

பத்மா: சொல்லுகிறேன். முதலில் வாளை உறையில் போடு!..



மனோகரா

மகாராஜாவிற்கோ... வசந்த சேனைக்கோ... என் அனுமதியின்றி, எந்தவிதமான தீங்கும் செய்வதில்லையென்று ஆணையிடு! என்மேல் ஆணையிடு!
மனோ: அம்மா...!
பத்மா: தாயின் மேல் ஆணையிடு!...
மனோ: அரசரை ஒன்றும் செய்வதில்லையம்மா..
பத்மா: கூடாது வசந்த சேனைக்கும் சேர்த்துத் தான்.....!
மனோ: வசந்த சேனை... வட்டமிடும் கழுகு!.. வாய் பிளந்து நிற்கும் ஓநாய்!.... நம்மை வளைத்து விட்ட மலைப்பாம்பு! நிற்கும் ஓநாய்! .. நம்மை வளைத்து விட்ட மலைப்பாம்பு! அவளுக்கு இரக்கம்...? முடியாது...! கூடாது...!
இபடியாக மனோகரன் சிவாஜி... வசந்தசேனையுடன் பெரிதும் குமுறும் காட்சிகள் பல.... சூழ்ச்சிக்கார, புரட்டுக்காரி, தளுக்குமேனியாள், வஞ்சகி என்றே வசைமாரி பொழிவார்...

இப்படம் வெளியானபின் இன்றும் கூட தமிழக 'அரசியல் சமூக, பொருளாதார, மற்றும் குடும்பத்தை நாசம் செய்யும் பெண்மணிகளை 'அவள் ஒரு வசந்த சேனை' என்றே அடையாளம் சொல்லி அழைக்கிறார்கள். இது கலைஞரின் சமூகப்பார்வைக்குக் கிடைத்த வெற்றி. மனோகரனின் எதிர்ப்புணர்ச்சிகளே 'வசந்தசேனை'யை 'ராஜகுமாரி' ஆக்கியது என்று வித்தியாசமாக எழுதுவோம். அப்படியாக நடிகர் திலகத்துடன் 'மனோகரா' 'அன்பு'. (அன்பு சமூகப்படம், சிவாஜிக்குச் சிற்றன்னையாக வருவார்), 'தங்கப்பதுமை' ஆகிய படங்களில் இணைந்தவர்.

'தங்கப்பதுமை' யிலும் அப்பாவி ராஜ வைத்தியனாக வரும் சிவாஜியைத் தன்வசப்படுத்தும் ஆடலழகியாக வேடமேற்று நடித்திருப்பார். பின் தவறுணர்ந்து திருந்தி சிவாஜிக்கு உதவுவார். ஒரு சில படங்களில் நடித்திருந்தாலும் திறமையும், அழகும், அநுபவமும் மிகக் கொண்டிருந்த தமிழ்த் திரையுலகின் மூத்த நாயகியான திருமதி. டி.ஆர். ராஜகுமாரியுடன் இணைந்து நடித்த பெருமை சிவாஜி அவர்களுக்கும் உரியது.

டி.ஆர். ராஜகுமாரி அவர்களைக் கவர்ச்சிக் கதாநாயகியாகவும், வில்லித்தனமான பாத்திரங்களை ஏற்பவருமாகப் பார்த்த பெரும்பான்மை இரசிகர்ளுக்குத் தெரியாத அவரின் இன்னொரு பக்கம் புனிதமானது என்று இங்கு அவரின் மறைவையொட்டி நினைவுபடுத்த வேண்டியது எனது கடன்.

அமரர். கவியரசு கண்ணதாசன் திருமதி. டி. ஆர். ராஜகுமாரி அவர்களைப் பற்றி எழுதும் போது பின்வருமாறு குறிப்பிடுகிறார். "....நூற்றுக்கணக்கான நடிகைகளை நான் வாழ்க்கையில் சந்தித்திருக்கிறேன். ராஜகுமாரியுடன் பேசும் போது "அம்மா" என்று தான் பயபக்தியோடு அழைக்கத் தோன்றும். 'எனது படப்பிடிப்பில் இவரைப் பார்க்கும் போது 'இவரது தம்பியாக நாம் பிறக்கவில்லையே' என்ற ஆதங்கம் என்மனதில் எழும்' 'அவரது வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் குடியிருந்த என் நண்பர் சம்பத் அடிக்கடி சொல்வார். 'சமயத் துறையில் இறங்கியிருந்தால் ராஜகுமாரியும் வணங்கத்தக்க அன்னை சாரதாமணி ஆகியிருப்பார்' என்று! இப்படியாகப் போற்றப்பட்ட அந்த அம்மையார் ராஜகுமாரி சிவாஜி அவர்களுடன் இணைந்து நடித்தமையால் அது சிவாஜிக்கும் பெருமையன்றோ!.

*கதாநாயகிகள் தொடர்கிறார்கள்*


## NetTek Training & Solutions Inc.

(416) 431-4545

868 Markam Road, Suite # 104, Scarborough, Ontario, M1H 2Y2

**MCSE & JOB TRAINING**

MICROSOFT CERTIFIED SYSTEMS ENGINEER

Centre for COMPUTER STUDIES AND EMPLOYMENT

Windows NT 4.0 Workstation
Windows NT 4.0 Server
Enterprise Server 4.0
Networking Microsoft TCP/IP
Internet Information Server 4.0
Networking Essentials

$ 299.00

PROGRAMMING
JAVA
C++ LANGUAGE
VISUAL BASIC

FREE COMPUTER FOR UNEMPLOYED STUDENTS & SOCIAL BENEFIT STUDENTS

KIDS COMPUTER CLASSES!!

INTRODUCTION TO COMPUTERS FOR ADULTS

CNA
CERTIFIED NOVELL ADMINISTRATOR

QUICK REVIEW in MCSE Courses $99.00 for each!!

Web-Designing & HTML Classes (Level-1 & Level-11)

E-Mail: nettek-training@home.com

Microsoft® Certified Professional Systems Engineer

www.nettek-training.com

We do Computer Training, Network Consulting & Computer




## V.N.T. AUTO COLLISION

* Complete Collision Service
* Unibody Frame Straightening
* Under Coating & Rust Proofing
* All Mechanical & Electrical Repairs
* உட்புற வெளிப்புற பராமரிப்பு
* Tuneup & Brakes
* Oil Change & Lubrication
* Insurance Claims
* Free Estimates



200 FULLER ROAD
UNIT #4A
PICKERING, ONT.
TEL: (905) 426-5136






ஃ கிரகப் பொருத்தம் பார்த்தல்
ஃ சுபமுகூர்த்தம் கணித்தல்
ஃ சாதகக் குறிப்பு கணித்தல்
ஃ பலன் பாத்தல்
ஃ எண் சோதிடப்படி ஆலோசனை கூறுதல்



☎: 299-8361

## சூரியக்குடும்பம் 18 — விண்வெளி

*தருபவர்- கனி*

கடந்த சில நாட்களாக சூரியக் குடும்பத்தில் அதன் பிரதானமான அங்கமான சூரியன் பற்றிப் பார்த்தோம். இனிவரும் சில நாட்களுக்கு பூமியைப் பற்றிப் பார்ப்போம். இந்தப் பூமி கூட எமது பார்வையில் மிகவும் முக்கியமானதாகிறது. முதலாவதாக நம்மனைவருக்கும் இப் பூமியே தாய்மனையாகிறது. இதுவரையில் நிருபணங்களுக்குட்பட்ட வரையில் நமது பூமியிலேயே மாத்திரம் உயிரினங்கள் உண்டு. [நமது பிரபஞ்சத்தில் வேறு சூரியன்களை - நட்சத்திரங்களை வலம் வரும் கோள்களில் உயிரினங்கள் இருக்கலாம் என விஞ்ஞானிகள் நம்புகின்ற போதிலும் அதற்கான நிருபணங்கள் எதுவும் இதுவரையில் இல்லை.] மனிதனோ உயிரினங்களோ இறைவனால் படைக்கப்பட்டவை எனில் பூமியில் மாத்திரமே மனிதனும் உயிரினங்களும் இருக்க வேண்டும். அல்லாமல் தொடர்ச்சியான வேதியல் மாற்றங்களின் விளைவாகத்தான் உயிரினங்களும் மனிதனும் தோன்றியிருக்க வேண்டும் என்ற விஞ்ஞானிகளின் கூற்று உண்மையாயின் பூமியில் மாத்திரமல்லாது பிரபஞ்சத்தில் வேறு வேறு இடங்களில் கூட உயிரினங்கள், மனிதனை ஒத்த உயிரினங்கள் இருப்பதற்கு வாய்ப்புக்கள் உண்டு என்பது எனது கருத்தும் கூட] இந்த வகையில் கூடப் பூமி முக்கியமானதாக அமைகிறது எனலாம்.

சூரியக் குடும்பத்தில் சூரியனில் இருந்து மூன்றாவதாக காணப்படும் நீலநிறக் கிரகமாகிய பூமியே எல்லாக் கிரகங்களையும் விட அழகானதாகும். [இது காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு போன்றதல்ல]. உயிரினங்கள் வாழக்கூடிய பூகோள அமைப்பு, போதுமான அளவு இயற்கைப் பாதுகாப்பு வலையங்கள் என்பன இப்பூமிக்கு அமைந்திருப்பது பூமியின் விஷேசித்த தன்மை நமது அதிஸ்டமும் கூட. இப்பூகோள அமைப்பும், பாதுகாப்பு வலயங்களும் சடுதியாக வந்தவையல்ல, தொடர்ச்சியான வேதியல் மாற்றங்களின் ஊடாகவே வந்தவை என விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். அவை என்ன வென்று பார்ப்போம்.

